தமிழ் நாடு சட்டப் பேரவை

வியாழக்கிழமை, 1973 மார்ச் 8.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. பெ. சீனிவாசன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினக்கள்-விடைகள்.

வெள்ளிக்குறியிட்ட வினக்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: முதலமைச்சர் அவர்களுடைய வேண்டுகோளுக்கிணங்க 236, 237 எண்களுள்ள வினக்கள் பின்னர் எடுத்துக் கொள்ளப்படும்.

சிக்கண்ண அரசு கலைக் கல்லூரியில் பட்டமேற்படிப்பு வகுப்புகள்

* 281 வின—திரு. சு. துரைசாமி: மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா—

சிக்கண்ண அரசினர் கலைக்கல்லூரியில் எம்.ஏ., எம்.எஸ்.சி. பட்டப் படிப்பு 1972-ம் ஆண்டில் துவக்கும் செயற்குறிப்பு அரசு பரிசிலனையில் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: இல்லை.

Colltge in the name of Dr. Ambedkar

* 282 *Q.*—THIRU N. DENNIS: THIRU S. VADIVEL: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether there are proposals under the consideration of the Government to open a college in the name of Dr. Ambedkar in this State; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) ஆம்.

(இ) வடசென்னை அரசு கல்லூரியை டாக்டர் அம்பேத்கார் பெயரில் ஆரம்பிக்க துரித நடவடிக்கைகளை எடுக்கும்படி சென்னை மாவட்ட ஆட்சியாளரையும் கல்லூரிக் கல்வி இயக்குநரையும் அரசு கேட்டுக்கொண்டுள்ளது. அக் கல்லூரி 1973-74-ம் ஆண்டு முதல் செயல்படும்.